**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 338/2018**
**Deposition of witness for prosecution -PW-5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பிரபாகரன் |
| Father Name | : | திரு.ஆறுமுகம் |
| Village | : | சனவேலி |
| Taluk | : | ஆர்.எஸ்.மங்கலம் |
| Calling | : | பெயிண்டர் |
| Religion | : | இந்து |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 15th day of December 2022.

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ.3 ஆகும். கடந்த 16.07.2018ம் தேதி 9.00 மணியளவில் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு போலிசார் பார்வை மகஜர் தயார் செய்து, வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், பைசல் என்பவரும் கையொப்பம் செய்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் கு.வி

விபத்தில் இறந்துபோன ஆறுமுகம் என்பவரும் காந்தி நகரில் குடியிருந்து வருபவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் கொடுத்த விபத்தில் இறந்துபோன ஆறுமுகத்தின் மகன் உலகநாதன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். என்னிடத்தில் யார் கையொப்பம் வந்து வாங்கினார்கள் என்றால் தேவிபட்டிணம் காவல் நிலையத்தில் உள்ள எழுத்தர் மீனாட்சி சுந்தரம் என்பவர் என்னிடம் கையொப்பம் வாங்கினார். அந்த கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்றால் காந்தி நகர் முக்குரோட்டில்

வைத்து போட்டேன். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்துபோன ஆறுமுகமத்தின் மகன் உலகநாதன் என்னுடைய நண்பர் என்பதாலும், அவர் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளார், அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் அந்த கையொப்பத்தை காவல் நிலையத்தில் போட்டேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் என் நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 338/2018**
**Deposition of witness for prosecution -PW-6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மீனாட்சிசுந்தரம் |
| Father Name | : | திரு.வீராச்சாமி |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 15th day of December 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது இராமநாதபுரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.07.2018ம் தேதி தேவிபட்டிணம் காவல் நிலைய குற்ற எண். 127/2018 வழக்கில் விபத்தில் இறந்துபோன ஆறுமுகம் என்பவரை பிரேத பரிசோதனை செய்ய மருத்துவரிடம் அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை செய்து பின்பு உறவினர்களிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்